O.S. 131 /2015

Dated : 10.09.2022

Time: 11.40 P.m. To 11.58 p.m.

P.W. - 1 சாட்சி சத்தியபிராமாணம் செய்யப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு

**3**ம் பிரதிவாதி சார்பாக குறுக்குவிசாரணை

1. கணேசன் என்பவர் ஈஸ்வரியை திருமணம் செய்து கொண்டார். அவருடைய பிள்ளைகள் தான் 1 , 2 பிரதிவாதிகள். கணேசன் 26.08.1986ல் காலமாகிவிட்டார். ஈஸ்வரியும் 10.07.2008ல் இறந்துவிட்டார். கணேசனும், ஈஸ்வரியும் விவாகரத்து பெறவில்லை. 1ம் வாதி பெரியம்மாள் கணேசனை 1979ல் திருமணம் செய்துள்ளதாக சொல்லியுள்ளோம் ஆனால் அதற்கான ஆவணங்களை முன் நிறுத்தவில்லை, ஈஸ்வரிக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் 1ம் வாதியை கணேசன் திருமணம் செய்துகொண்டார். அந்த திருமணத்தின் போது முதல் திருமணம் நிலுவையில் இருந்தது. முதல் திருணம் நிலுவையில் இருக்கும் போது 2ம் திருமணம் செய்வது சட்டப்படியாக தவறு என்றும், அதனால் சட்டப்பூர்வமான மனைவி என்ற அந்தஸ்து 1ம் வாதிக்கு கிடையாது என்றால் சரியல்ல.

2. தாவா சொத்துக்கள் மேற்படி கணேசனின் பூர்வீக சொத்தாகும். எனவே அந்த சொத்துக்களில் வாதிகளுக்கு எந்தஉரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பரிவர்த்தன பத்திரம் மூலம் 2இன சொத்தை 1, 2 பிரதிவாதிகளிடம் இருந்து செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1993ல் பரிவர்த்தனை நடந்த விவரம் வாதிகளுக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த சொத்தை 1993லிருந்தே தொடர்ச்சியாக 3ம் பிரதிவாதி அனுபவித்து வந்து, அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி இடத்தில் 3ம் பிரதிவாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் வழக்கிற்கு பிறகு தான் தெரியும்.

3. நான் மேற்படி சொத்து உள்ள ஊரில் தான் வசித்து வருகிறேன். மேற்படி பரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

" என்னால்/ என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

sd/ **K. ANANTHAN,**

**Subordinate Judge,**

**Attur.**